Journal of Social Review
Volume 3 (1)
December 2014
Department of
Social Sciences

# இலங்கையின் சமூக பொருளாதாரக் குறிகாட்டிகள் சார்க் நாடுகளை அடிப்படையாகக்கொண்ட ஒப்பீட்டாய்வு

**(Socio-Economic Indicators of Sri Lanka – Comparative Analysis based on SAARC Countries)**

***Dr. S.M.Ahamed Lebbe***

## ஆய்வுச்சுருக்கம்

*ஒரு நாடு நிலைத்து நிற்கக்கூடிய நீண்டகால பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு பொருளாதார வளர்ச்சியுடன் சமூக முன்னேற்றங்களும் ஏற்படவேண்டும் என்பது பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாக காணப்படுகின்றது. இலங்கையில் சுதந்திரத்தைத் தொடர்ந்து தொடர்ச்சியாக மாறிமாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் யாவும் நாட்டின் நலன் கருதி சமூக பொருளாதார முன்னேற்றத்தில் கூடிய கவனம் செலுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதன்பின்னணியில், இவ்வாய்வின் பிரதான நோக்கம் இலங்கையின் தற்போதைய சமூக-பொருளாதார நிலைமைகளை ஏனைய அங்கத்துவ சார்க் நாடுகளுடன் ஒப்பிட்டு விளக்குவதாக அமைகின்றது. இரண்டாம் நிலைத்தரவுகளைப் பயன்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் பண்புசார் ஆய்வுக்குட்படுத்தபட்டுள்ளன. ஆய்வின் முடிவிற்கிணங்க சுதந்திரத்தின் பின்னர் இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் சமூக பொருளாதார அபிவிருத்தியில் கவனம் செலுத்தியதன் விளைவாக இன்று இலங்கை ஏனைய அங்கத்துவ சார்க் நாடுகளுடன் ஒப்பிடும் போது பொருளாதார முன்னேற்றங்களை விடவும் சமூக முன்னேற்றங்கள் மிகவும் திருப்தியளிக்க்கூடியதாக காணப்படுகின்றன. இந்நிலையை தொடர்ச்சியாக பேணி பின்பற்றப்படும் பட்சத்தில் மாத்திரமே பொருளாதார அபிவிருத்தி அடைந்த நாடுகளை ஓரளவுக்காவது அண்மிக்க முடியும். ஆகையால் தற்போதைய அரசு மாத்திரமன்றி ஆட்சியை தொடரும் எந்தவொரு அரசாங்கமும் இவ்விடயத்தில் கவனத்தை ஈர்ப்பது அவசியமாகும்.*

## அறிமுகம்

இந்திய உபகண்டத்தில் ஒரு இயற்கை எழில் சூழ்ந்த நாடாக காணப்படும் இலங்கையானது 65,610 சதுரகிலோ மீற்றர் பரப்பளவையும் 2009ம் ஆண்டின்படி 20.3 மில்லியன் சனத் தொகையினையும் கொண்டமைந்துள்ளது. மலைநாட்டுப் பிரதேசத்தையும் கரையோரச் சமவெளிகளையும் தன்னகத்தே கொண்ட இந் நாட்டிற்கு மாறுபட்ட சூழலியல் பண்புகளை இவை வழங்குவதுடன் வெப்பநிலையைப் பொறுத்தவரையில் மிகச்சிறிய பருவகால வேறுபாடே காணப்படுகின்றது. 1948ம் ஆண்டு வரை அன்னியரால் ஆட்சிக்குட்படுத்தப்பட்ட இலங்கைத் தீவானது முற்றிலும் இலங்கையின் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி ஐரோப் பியச் சந்தைக்குத் தேவையான பெருந்தோட்ட உற்பத்திகளுக்கு மட்டுமே அவர்கள் கூடிய முக்கியத்துவம் கொடுத்தனர். இதன்விளைவு இலங்கையின் விவசாய ஏற்றுமதிப் பொருட்கள் 1980 வரைக்கும் மொத்த உள்நாட்டு உற்பத் திக் கட்டமைப்பிலும், ஏற்றுமதிக் கட்டமைப் பிலும் கூடிய பங்கை வகித்துள்ளமை குறிப் பிடத்தக்கதாகும். இலங்கையின் விவசாய ஏற்றுமதிப் பொருட்களுக்கு உலக சந்தையில் கூடிய செல்வாக்கு காணப்பட்டதனால் ஏற்றுமதி

வருமானம் அதிகரித்துக் காணப்பட்டதுடன் சென்மதி நிலுவை மீதியும் எமது நாட்டுக்கு அனுகூலமாகவே காணப்பட்டது. ஆகையால் இலங்கை சுதந்திரம் அடைந்தவுடன் கொள்கை வகுப்போரும் (Policy Makers) அடுத்த தசாப்த காலப்பகுதி வரைக்கும் ஏற்கனவே பின்பற்றப்பட்டு வந்த பொருளா தாரக் கொள்கையையே தொடர்வதென தீர்மானித்தனர். என்றாலும் 1950 களின் பிற்பகுதியில் ஏற்றுமதியைவிட இறக்குமதி 145 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட் டதன் விளைவாக சென்மதி நிலுவை மீதியானது பாதக நிலைமையை நோக்கி நகரத்தொடங்கியது. இதனால் படிப்படியாக இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன. இறுதியில் 1970-1977 காலப்பகுதிக் கிடையில் இக்கட்டுப்பாடு மிகவும் இறுக் கமாக பேணப்பட்டது. எனினும் 1978 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கம் மூடிய பொருளாதாரக் கொள்கைக்குப் பதிலாக தாராள பொருளாதாரக் கொள்கையை (Liberelization Policy) அமுல்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

அன்னியர் கால ஆட்சியின்போது இலங்கை யின் பொருளாதார நிலைமைகள் சாதகமான தாக காணப்பட்டபோதும் சமூக நிலைமைகள் அந்தளவிற்கு வளர்ச்சி அடைந்திருக்கவும் இல்லை அதற்காக அவர்கள் கூடிய கவனம் செலுத்தியிருக்கவும் இல்லை. என்றாலும் சுதந்திரத்தின் பின்னர் இலங்கையை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் அனைவரும் இலங் கையின் பொருளாதார நிலைமைகளுக்காக மாத்திரமன்றி சமூக நிலைமைகளையும் முன் னேற்றும் வகையில் செயற்பட்டு வந்துள்ளனர். இதன் பின்னணியில், இவ்வாய்வின் பிரதான நோக்கம் இலங்கையின் தற்போதைய சமூக-பொருளாதார நிலைமைகளை ஏனைய அங்கத்துவ சார்க் நாடுகளுடன் ஒப்பிட்டு விளக்குவதாக அமைகின்றது.

## தரவு சேகரிப்பும், ஆய்வு முறையும்

இவ்வாய்வுக்குத் தேவையான தரவுகள் யாவும் இரண்டாம் நிலைத் தரவுகளாகும். இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் மற்றும் மத்திய வங்கியின் சமூக-பொருளா தார குறி காட்டிகள் என்பனவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் பண்புசார் ஆய்வுக்குட்படுத்தபட்டுள்ளதுடன் கூடியஎள விற்கு விமர்சன ரீதியலமைந்த ஒப்பீட்டாய் விற்குட்படுத்தப்பட்டதாகவும் அமைந்துள்ளது.

## சமூக-பொருளாதார அபிவிருத்திகள்

மெய்த்தேசிய உற்பத்தியில் ஏற்படும் தொடர் தேர்ச்சியான அதிகரிப்பு பொருளாதார அபிவி ருத்தி என 1950 களுக்கு முன்பு பொருளியல் அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட வரைவிலக் கணங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் 1950 காலப்பகுதியில் உலகில் பல்வேறு நாடுகள் பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ள போதும் அந்நாடுகளில் வறுமை, வருமான சமமின்மை, வேலையின்மை, பணவீக்கம், தெரிவுச் சுதந்திரமின்மை போன்ற பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டன. இதனால் 1950 களுக்குப் பின்னர் பொருளாதார அபிவிருத்தி என்பதற்கு பொருளியல் அறிஞர்கள் பொரு ளாதார வளர்ச்சியுடன் ஏனைய சமூக முன் னேற்றங்களையும் இணைத்து வரைவிலக் கணங்களையும் கூற முற்பட்டனர்.

ஆகையால், ஒரு நாட்டின் மெய்த்தேசிய உற்பத்தியில் ஏற்படும் தொடர்தேர்ச்சியான அதி கரிப்புடன் ஏனைய கல்வி, சுகாதார, வைத்திய சேவைகளின் முன்னேற்றம் மற்றும் சம வரு மானப் பங்கீட்டை ஏற்படுத்துதல் வேலைவாய்ப் பை அதிகரித்தல், வறுமையைக் குறைத்தல், தெரிவுச்சுதந்திரம் மற்றும் அச்சம் பயம் இன்றி வாழக்கூடிய சூழலை உருவாக்குதல் போன்ற பல சமூக நல முன்னேற்றங்களையும் உள்ள டக்கியதாகும். Dudley Seers (1969) குறிப்பிடும் போது பொருளாதார அபிவிருத்தியானது வறுமை, வருமான சமமின்மை மற்றும் வேலை யின்மை என்பனவற்றைக் குறைப்பதன் மூலமே இடம்பெறும் எனக் குறிப்பிடுகின்றனர். இத்த கைய வரைவிலக்கணம் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக காணப்படுகின்றது. பொருளி யல் அறிஞரான Myrdal (1974) குறிப்பிடும் போது சமூக முறையில் ஏற்படும் முழுமையான மாற்றமே அபிவிருத்தி என குறிப்பிடுகின்றார்.

பொருளாதார வளர்ச்சி என்பது பொருளாதார கட்டமைப்பு மாற்றம் எதுவுமின்றி பரிமாணத்தில் (Dimension) ஏற்படும் மாற்றம் என்றும் அபிவிருத்தி என்பதற்கு சமூக நிலையின்

கட்டமைப்பு மாற்றத்திற்கு இட்டுச் செல்லக் கூடிய வகையிலான புதுமையில் (Innovation) ஏற்படும் முன்னேற்றம் என்றும் Friedman குறிப்பிடுகின்றார். பொதுவாக சமூக பொருளாதார அபிவிருத்தியானது மொத்த உள்நாட்டு உற்பத்தி, ஆயுள் எதிர்பார்க்கை, கல்வியறிவு, மொத்த வேலைவாய்ப்பு மட்டம், மற்றும் தனியாள் சுதந்திரம், தனிமனித பாதுகாப்பு, பயத்திலிருந்து விடுதலை பெறுதல் போன்ற பல்வேறு காரணிகளினால் அளவிடப்படு கின்றது (http://en.wikipedia.org/wiki/Socioeconomic_development).

பொதுவாக சமூக பொருளாதார காரணி களுக்கும், பொருளாதார வளர்ச்சிக்குமிடை யிலான தொடர்பானது பொருளாதார அபி விருத்தி மீது நேரடியானதும், மறைமுக மானதுமான மானிட அபிவிருத்தியின் தாக்கத் தினை வெளிப்படுத்துகின்றது (Ana-Maria POPA (2012**)**.

எனவே சுருங்கக்கூறின் பொருளாதார வளரச்சி யுடன் கூடிய ஏனைய சமூக பொருதார முன்னேற்றங்களையும் உள்ளடக்கியதே பொருளாதார அபிவிருத்தியாகும். இலங்கை யில் சுதந்திரத்தைத் தொடர்ந்து தொடர்ச்சியாக மாறிமாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் யாவும் நாட்டின் நலன் கருதி சமூக பொருளா தார முன்னேற்றத்தில் கவனம் செலுத்தி வந்துள்ளமையும் கவனிக்கத்தக்கதாகும். இலவசக் கல்வி, இலவச சுகாதார வசதிகள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், வீடமைப்பு. போசாக்கு மற்றும் ஏனைய பொது வசதிகளின் மேம்பாடு போன்றவற்றின் மூலம் சமூக-பொருளதார முன்னேற்றத்தை ஏற்படுத்து வதற்கு பல முயற்சிகளையும் பின்பற்றி வந்துள்ளன. இதன் விளைவாக சார்க் நாடுகள் மாத்திரமன்றி பல்வேறு கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிடும் போதும் இலங்கையின் சமூக சுட்டிகள் பல முன்னேற்றங்களை உடை யனவாக காணப்படுகின்றன. அட்டவணை 1,2 ஆகியன இலங்கையின் சமூக-பொருளாதார நிலைமைகளை ஏனைய அங்கத்துவ சார்க் நாடுகளுடன் ஒப்பிட்டு விளக்குகின்றன. அட்டவணை -1, 1995 – 2006 க்கிடைப்பட்ட தரவுகளையும் அட்டவணை - 2, 2010 – 2012 க்கிடைப்பட்ட தரவுகளையும் விளக்கு கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அட்டவணை-1

சார்க் நாடுகளின் சமூக பொருளாதார சுட்டிகள் (1995 – 2006)

| சுட்டிகள் | வருடம் | இலங்கை | இந்தியா | பாகிஸ்தான் | பங்காளதேஸ் | நேபாளம் | பூட்டான் | மாலைதீவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| மானிட அபிவிருத்திச் சுட்டி | 2005 | 0.743 | 0.619 | 0.551 | 0.547 | 0.534 | 0.579 | 0.741 |
| எழுத்தறிவு வீதம் ஆண் | 1995-2005 | 90 | 73.5 | 64.3 | 53.6 | 62.3 | 61 | 96 |
| பெண் | | 89 | 48 | 35 | 40.8 | 35 | 34 | 96 |
| சனத்தொகை % (BPL) | 1990-2004 | 25 | 28.6 | 32.6 | 49.8 | 30.9 | 26 | 92 |
| ஆஸ்பத்திரி கட்டில்கள்(தலா 10,000 மக்கள்) | 1990-2002 | 3.1 | 0.67 | 0.69 | 0.3 | 0.2 | 1.6 | 1.4 |
| நாளாந்த செய்திப் பத்திரிகைகள் (தலா1000பேர்) | 2000 | 29 | 60 | 39 | 9 | 12 | n.a | n.a |
| வானொலிப் பெட்டிகள் (தலா 1000 பேர்) | 2004 | 215 | 120 | 105 | 49 | 39 | n.a | n.a |
| தொ.காட்சி பெட்டிகள் (தலா 1000 பேர்) | 2004 | 117 | 83 | 150 | 59 | 8 | n.a | n.a |
| சிசுமரண வீதம்(தலா 1000 உயிர் பிறப்புகள்) | 2005 | 11 | 56 | 79 | 54 | 56 | 65 | 33 |
| தாய்மார் இறப்பு வீதம்(தலா100,000உயிர்பிறப்புகள்) | 2005 | 58 | 450 | 320 | 578 | 830 | 440 | 120 |
| ஆயுள் எதிர்பார்க்கை | 2000-2005 | 70.8 | 62.9 | 63.6 | 62 | 61.3 | 63.5 | 65.6 |
| சனத்தொகை வளர்ச்சி வீதம் | 2000-2005 | 1.3 | 1.6 | 1.9 | 1.3 | 2.3 | 2.3 | 1.5 |
| தலா தேசிய உற்பத்தி (US $) | 2006 | 1350 | 807.5 | 821 | 459 | 317 | n.a | n.a |
| பொருளதார வளர்ச்சி வீதம் | 2006 | 7.4 | 9.4 | 1.6 | 6.7 | 2.4 | n.a | 23.5 |
| சுனத்தொகை % | | | | | | | | |
| 0 ï 14 வருடம் | 2005 | 24 | 32 | 38 | 35 | 38 | 38 | 33 |
| 15-64 வருடம் | 2005 | 69 | 63 | 58 | 61 | 58 | 57 | 63 |
| 65உம் அதற்கு மேல் | 2005 | 7 | 5 | 4 | 4 | 4 | 5 | 4 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி, 2008.

தரப்பட்ட அட்டவணைகளுக்கிணங்க இலங்கையின் எழுத்தறிவு வீதம் 1999-2005 க்குமிடையில் சராசரியாக 90 சதவீதமாகவும், 2011இல் இது 92 சதவீதமாகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது. மாலைதீவை தவிர ஏனைய சார்க் நாடுகளான பாகிஸ்தான், இந்தியா, பங்காளதேஸ்,நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகள் யாவற்றிலும் இவ்வீதம் இவ்விரு காலப்பகுதிகளுக்கிடையில் 46 - 62 சதவீதத்துக்கிடை யிலேயே காணப்படுகின்றது. பொதுவாக பங்காளதேசத்தில் இந்நிலைமை மிகவும் மோசமாக காணப்படுகின்றமை கவனிக்கத்தக்கதாகும். அத்துடன் இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளைத்தவிர ஏனைய சார்க் நாடுகள் யாவற்றிலும் பெண்கள் மத்தியில் எழுத்தறிவு வீதம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இத்தகைய நிலைமை அந்நாடுகளின் நீண்டகால பொருளாதார அபிவிருத்திக்கு சாதகமாக அமையும் என கூற முடியாது.

அட்டவணை-2

சார்க் நாடுகளின் சமூக பொருளாதார சுட்டிகள் (2010 - 2013)

| சுட்டிகள் | வருடம் | இலங்கை | இந்தியா | ஆப்கானிஸ்தான் | பாகிஸ்தான் | பங்காளதேஸ் | நேபாளம் | பூட்டான் | மாலைதீவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மானிட அபிவிருத்திச் சுட்டி | 2013 | 0.750 | 0.586 | 0.468 | 0.537 | 0.558 | 0.540 | 0.584 | 0.698 |
| எழுத்தறிவு வீதம் ஆண் | 2011 | 93.5 | 75.2 | n. a | 68.6 | 61.3 | 73.0 | | 98.4 |
| பெண் | | 91.1 | 50.8 | n. a | 40.3 | 52.2 | 48.3 | | 98.4 |
| சனத்தொகை % (BPL) | 2012 | 8.5 | 29.8 | n. a | 22.5 | 31.5 | 25.2 | 23.2 | n. a |
| ஆஸ்பத்திரி கட்டில்கள்(தலா 10,000 மக்கள்) | 2011 | 33 | 9.0 | 4.0 | 6.0 | 5.8 | 1.5 | 18 | 43 |
| சிசுமரண வீதம்(தலா 1000 உயிர் பிறப்புகள்) | 2010 | 9.4 | 48 | 103 | 70 | 38 | 41 | 44 | 14 |
| தாய்மார் இறப்பு வீதம்(தலா100,000உயிர்பிறப்புகள்) | 2010 | 35 | 200 | 460 | 260 | 240 | 170 | 180 | 60 |
| ஆயுள் எதிர்பார்க்கை | 2012 | 75.1 | 65.8 | 49.1 | 65.7 | 69.2 | 69.1 | 67.6 | 77.1 |
| சனத்தொகை வளர்ச்சி வீதம் | 2012 | 0.9 | 1.3 | 1.9 | 2.0 | 1.3 | 0.9 | 1.8 | 3.4 |
| தலா தேசிய உற்பத்தி (US $) | 2012 | 2922 | 1541 | n. a | 1190 | 740 | 671 | 2532 | 5293 |
| பொருளாதார வளர்ச்சி வீதம் | 2012 | 6.3 | 5.0 | n. a | 4.4 | 6.2 | 4.9 | 9.4 | 3.4 |
| சனத்தொகை % | | | | | | | | | |
| 0 ï 14 வருடம் | 2012 | 25.2 | 29.4 | 47.4 | 34.5 | 30.5 | 35.5 | 28.6 | 29.1 |
| 15-64 வருடம் | | 66.9 | 65.4 | 50.3 | 61.2 | 64.8 | 59.4 | 66.7 | 65.9 |
| 65உம் அதற்கு மேல் | | 7.8 | 5.2 | 2.3 | 4.4 | 4.7 | 5.1 | 4.7 | 5.0 |

மூலம் : இலங்கையின் சமூக, பொருளாதார தரவுகள், மத்திய வங்கி, 2014.

எனவே,மாலைத்தீவை தவிர ஏனைய சார்க் நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் கல்வி அறிவுடையோர் வீதமானது உயர் நிலையில் காணப்படுவதற்கு இலங்கை சுதந்திரம் அடைந்த காலப்பகுதியிலிருந்து இலவசக்கல்விக் கொள்கையை சகல அரசாங்கங்களும் தொடர்ச்சியாக பின்பற்றி வருகின்றமை மிக முக்கிய காரணமாகும். அத்துடன் இலவச சீருடை, ஆரம்பக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கும் திட்டம் போன்றனவும் துணையாக அமைகின்றன. தற்போது இலங்கையின் கல்வி அறிவுடையோர் வீதமானது அபிவிருத்தி அடைந்த நாடுகளை அண்மித்துள்ளமையும் இங்கு கவனிக்கத்தக்கதாகும். கல்வியின் முக்கியத்துவம் பற்றி Jingan (2007) குறிப்பிடும்போது கல்வியின்றி பொருளாதார அபிவிருத்தி இல்லை என குறிப்பிடுகின்றார். அத்துடன் எந்தவொரு நாட்டிலும் தேசிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் போதும் கல்வியறிவற்ற சனத்தொகையை வைத்துக் கொண்டு மேற்கொள்வது ஒரு மடத்தனமான செயலாகுமென Myrdal குறிப்பிடுவதாக Jingan (2007) குறிப்பிடுகின்றார். மேலும் Francesco Burchi (2006) குறிப்பிடும்போது கல்வியானது

உணவுப் பாதுகாப்பின்மைக்கு எதிரானதாகவும், பொருளாதார அபிவிருத்திக்கு சார்பானதாகவும் போராடுவதாக கோட்பாட்டு ரீதியாகவும், நடைமுறைரீதியாகவும் ஆதாரங்களுடன் விவாதிக்கின்றார்.

மொத்த சனத்தொகையில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்வோர் வீதமானது (Below Poverty Line) 1990 – 2004 க்கிடைப்பட்ட காலப்பகுதியில் ஆகக் கூடுதலாக மாலைத்தீவில் 92 சதவீதமாகவும்,பங்காளதேஸில் 50 சதவீதமாகவும் காணப்படுகின்றது. பாகிஸ்தான்,நேபாளம், இந்தியா, பூட்டான் ஆகிய நாடுகளில் இவ்வீதமானது முறையே 32.6, 30.9, 28.6, 26 வீதமாக காணப்படுகின்றன. இவை எல்லா நாடுகளை விடவும் இலங்கையில் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்வோர் வீதமானது மிகக்குறைவான மட்டத்தில் 25 சதவீதமாகவே காணப்படுகின்றது. ஆனால் 2012ம் ஆண்டில் பாகிஸ்தான்,நேபாளம், இந்தியா, பூட்டான் ஆகிய நாடுகளில் 22.5, 25.2, 29.8, 23.2 ஆக காணப்படுகின்றது. ஆனால் இலங்கை இவ்வாண்டில் 8.5 ஆக மிகவும் குறைந்தளவில் அதாவது இவ்விரு காலப்பகுதிக்கிடையில் 66 சதவீதத்தால் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தொடர்தேர்ச்சியாக இலங்கையை ஆட்சி செய்யும் அரசாங்கங்கள் யாவும் வறுமையை குறைவடையச்செய்து சம வருமானப்பங்கீட்டை ஏற்படுத்தும் நோக்கில் பங்கீட்டு அட்டை (Ration card), ஜனசவிய (Janasaviya) மற்றும் சமூர்த்தி (Samurthi Programe) போன்ற பல திட்டங்களை இடைவிடாது பின்பற்றி வருகின்றமை யினால் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்வோரின் வருமானம் அதிகரிக்கப்பட்டு சுய தொழில்வாய்ப்பிற்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளில் அநேகர் தொழில்வாய்ப்பு பெற்று சென்று எமது நாட்டுக்கு அந்நியச்செலாவணியை ஈட்டித் தருகின்றனர். இத்தகைய நிலைமைகள் யாவும் இலங்கையில் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்வோர் வீதம் குறைவாகக் காணப்படுவதற்கு பிரதான காரணங்களாகும்.

2005ம் ஆண்டு தரவுகளுக்கிணங்க (அட்டவணை – 1) தலா 1000 உயிர் பிறப்புக்களுக்கு மதிப்பிடப்படுகின்ற சிசு மரண வீதமானது பாகிஸ்தானைப் பொறுத்த வரையில் மிக உயர்வாக 79 சதவீதமாகவும், மற்றும் பூட்டானில் 65 சதவீதமாகவும், இந்தியா,நேபாளம் ஆகிய நாடுகளில் 56 சதவீதமாகவும், பங்காளதேஸ், மாலைதீவு ஆகிய நாடுகளில் முறையே 54, 33 சதவீதமாகவும் காணப்படுகின்றன. ஆனால் இலங்கையில் இவ்வீதமானது 11 சதவீதமாக மிகக் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றது. 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சார்க் அங்கத்துவ நாடுகளில் எட்டாவது நாடாக ஆப்கானிஸ்தான் அங்கத்துவம் பெற்றது. அந்நாடுகளின் சமூக பொருளாதார சுட்டிகளின் அடிப்படையில் 2010ம் ஆண்டு சிசுமரண வீதம் 103 ஆகக் காணப்படு கின்றது. சார்க் நாடுகளுக்குள் மிகவும் பாதகமான ஒரு நிலையை இந்நாடு கொண்டுள்ளமையை இங்கு காணக்கூடியதாக உள்ளது. 2010ஆம் ஆண்டு தரவுகளின் படி பொதுவாக எல்லா சாரக் நாடுகளிலும் முன்னரைவிட (2005) குறை வடைந்து காணப்பட்டபோதும் இலங்கையில் இதன் பெறுமதி 11 சதவீதத்திலிருந்து 9.4 சதவீதமாக மிகவும் சாதகமாக மாறி யுள்ளன. எனவே சிசு மரண வீதம் தொடர் பிலும் இலங்கை மிகவும் சிறந்ததொரு நிலையை தன்னகத்தே கொண்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

அட்டவணை – 1 இன்படி 2005ஆம் ஆண்டில் தாய்மார் இறப்பு வீதமானது இலங்கையில் 100,000 பேருக்கு சராசரியாக 58 இறப்புக்களே இடம்பெறுகின்றன. மாறாக நேபாளத்தில் இது 830 ஆகவும் பங்காள தேஸ், இந்தியா,பூட்டான் பாகிஸ்தான், மாலைதீவு ஆகிய நாடுகளில் முறையே 578, 450, 440, 320, 120 ஆகவும் காணப்படுகின்றன. சார்க் நாடுகளில் இவ்வீதமானது மூன்று இலக்கங்களுடன் காணப்படும் அதேவேளை இலங்கையில் இது இரட்டை இலக்கத்தில் காணப்பட்டபோதும் ஒற்றை இலக்கத்திற்கு அண்மித்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். 2010ம் ஆண்டில் சார்க் நாடுகள் யாவற்றிலும் இவ்வீதமானது வீழ்ச்சிப்போக்கினையே காட்டுகின்றது.

குறிப்பாக இது ஆப்கானிஸ்தானில் 460 ஆகக் காணப்படுகின்றது. என்றாலும் இலங்கையில் இவ்வீதம் இக்காலப்பகுதியில் 53 சதவீதத்திலிருந்து 35 ஆக கீழ் நோக்கி நகர்ந்து இலங்கையின் சமூக நிலையின் முன்னேற்றத்தை வலுப்படுத்தியுள்ளது. இதற்கும் இலங்கையில் பின்பற்றப்பட்டு வருகின்ற இலவச சுகாதார வைத்திய சேவைகள் மாத்திரமன்றி கல்வி முன்னேற்றமும் பிரதான காரணங்களென்றால் மிகையாகாது.

பிறப்பிலிருந்து சராசரியாக ஒரு மனிதன் எத்தனை ஆண்டுகள் உயிருடன் வாழ்வான் என்பதனைக் கணிப்பிடும் ஆயுள் எதிர்பார்க்கை குறிகாட்டியானது 2000-2005 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சராசரியாக 71 வருடங்களாகக் காணப்படுகின்றது. ஆனால் ஏனைய அங்கத்துவ சார்க் நாடுகள் யாவற்றிலும் இதன் பெறுமதியானது மிகக் குறைவாக அதாவது 60-65 வருடங்களுக்கிடைப்பட்டதாகவே காணப்படுகின்றன. 2012ம் ஆண்டில் இலங்கையில் இது மேலும் 75 சதவீதத்தை எட்டியுள்ளது. ஆப்கானிஸ்தானின் ஆயுள் எதிர்பார்க்கை 49.1 ஆகக் காணப்படுகின்றது. இந்நாட்டின் ஏனைய சுகாதார காரணிகளும் பின்னடைவான நிலையில் காணப்படுகின்றமையானது ஆயுள் எதிர்பார்க்கைக்கான சவாலான காரணியாக அமைகின்றது. எனினும் இலங்கையின் சுகாதார வைத்திய சேவைகளின் திருப்திகரமான நிலைப்பாடே இலங்கையின் ஆயுள் எதிர்பார்க்கை குறிகாட்டியை மேலும் வலுப்படுத்தியுள்ளது எனலாம். ஊழியத்தினுடைய வினைத்திறனும், உற்பத்தித் திறனும் அதிகரிக்கப்பட வேண்டுமாயின் மக்களினது உடல்நிலை திடகாத்திரமானதாக அமைய வேண்டும் என Jingan (2007) குறிப்பிடுகின்றார். இவ்வகையில் இலங்கையில் சுகாதார வைத்திய சேவைகளின் நிலைமைகள் திருப்பிகரமானதாக உள்ளது எனலாம். அத்துடன் கல்வி அறிவிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றமே இலங்கையின் சராசரி ஆயுள் எதிர்பார்க்கையை மேலும் மேல் நோக்கி நகர்தியுள்ளது என்றால் மிகையாகாது.

வைத்தியசாலைக் கட்டில்கள் 1990 – 2002க்கிடைப்பட்ட காலப்பகுதியில் தலா 10,000 பேருக்கு பூட்டான்மாலைதீவு ஆகிய நாடுகளில் 1.6, 1.4 ஆகக் காணப்படுகின்றன. மாறாக இந்தியா, பாகிஸ்தான், பங்காளதேஸ்,நேபாளம் ஆகிய நாடுகளில் 10,000 பேருக்கு 1 ஐ விடவும் குறைவாகக் காணப்படுகின்றமை பொது வைத்திய சேவைகளின் பின்தங்கிய நிலையை விளக்குவதாக அமைகின்றது. ஆனால் இலங்கையில் இது 3.1 ஆகக் காணப்படுகின்றமை முன்னேற்றகரமான நிலையை எடுத்துக்காட்டுகின்றது. தலா 1000 பேருக்கு இலங்கையிலேயே மிகக் கூடுதலாக 215 நபர்களிடம் வானொலிப் பெட்டிகள் காணப்படுகின்றன. இரண்டாவ தாக இந்தியாவில் 120 நபர்களிடமும், அடுத்த தாக பாகிஸ்தானில் 105 நபர்களிடமும் காணப்படுகின்றன. மேலும் இது ஏனைய நாடுகளில் 100ஐ விடவும் குறைவாகவே காணப்படுகின்றது.

தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பொறுத்த வரையில் தலா 1000 பேருக்கு பாகிஸ் தானில் 150 ஆகவும் இரண்டாவதாக இலங்கையிலேயே 117 ஆகக் காணப்படுகின்றது. ஏனைய நாடுகளில் இதன் பங்களிப்பு 100ஐ விடவும் குறைவாகும்.

நீண்ட ஆயுள் (longevity), கல்வி (educational attainment), வாழ்க்கைத்தரம் (decent standard of living) ஆகிய பிரதான சமூக-பொருளாதார விடயங்களை உள்ள டக்கிய மானிட அபிவிருத்திச் சுட்டியானது 2005ம் ஆண்டு இந்தியா, பாகிஸ்தான், பங்காளதேஸ்,நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய எல்லா சார்க் நாடுகளுடன் ஒப்பிடும் போதும் இலங்கையின் சுட்டியானது 0.743 என்ற முன்னேற்றகரமான நிலையை எடுத்துக்காட்டுகின்றது. இச்சுட்டி ஒரு நாட்டினது சமூக முன்னேற்றத்தை மாத்திரமன்றி பொருளாதார முன்னேற்றத்தையும் உள்ளடக்கியுள்ளமை விஷேட அம்சமாகும். பின்வரும் அட்டவணை 2013ஆம் ஆண்டுக்கான இலங்கையின் மானிட அபிவிருத்திச் சுட்டியின் நிலைமையை ஏனைய சார்க் நாடுகளுடன் ஒப்பிட்டு விளக்குகின்றது.

அட்டவணை-3

சார்க் நாடுகளின் மானிட அபிவிருத்திச் சுட்டியும்,
உலகத் தர வரிசையும் - 2013


| சார்க் நாடுகள் (SAARC Countries) | மானிட அபிவிருத்திச் சுட்டெண் (HDI) | உலகத் தர வரிசை (World Rank) |
|---|---|---|
| இலங்கை | 0.750 | 73 |
| இந்தியா | 0.586 | 135 |
| ஆப்கானிஷ்தான் | 0.468 | 169 |
| பாகிஸ்தான் | 0.537 | 146 |
| பங்காளதேஷ் | 0.558 | 142 |
| நேபாளம், | 0.540 | 145 |
| பூட்டான், | 0.584 | 136 |
| மாலைதீவு | 0.698 | 103 |

மூலம்: மானிட அபிவிருத்தி அறிக்கை, 2014

மேற்படி அட்டவணையின் அடிப்படையில் இலங்கை மானிட அபிவிருத்திச் சுட்டியின் அடிப்படையிலும், உலகத்தரவரிசையிலும் மிகவும் முன்னணியில் நிற்பதனைக் காணலாம். இச்சுட்டியின் அடிப்படையில் இலங்கை உலகில் 185 நாடுகளில் 73ஆம் நிலையில் காணப்படுகின்றது. இத்தகைய ஒரு நிலையை சார்க் அங்கத்துவ நாடுகளில் எந்தவொரு நாடும் எட்டிப் பிடிக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

வரைபடம் - 1

சார்க் நாடுகளின் மானிட அபிவிருத்திச் சுட்டியும்,
உலகத் தர வரிசையும் - 2013




மூலம்: மானிட அபிவிருத்தி அறிக்கை, 2014

பொருளாதார ரீதியான தரவுகளை நோக்கு கையில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதமானது சார்க் நாடுகளில் இந்தியா, மாலைதீவு ஆகிய நாடுகளைத் தவிர ஏனைய எல்லா நாடுகளையும் விட முன்னணியிலேயே காணப்படுகின்றது. என்றாலும் இத்தகைய வளர்ச்சியானது யுத்த சூழ்நிலைகளுக்கு மத்தியில் பெறப்பட்டவையாகும். தற்போது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதமானது இரட்டை இலக்கத்தை அண்மித்துக் கொண்டிருக்கின்றன. யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலை வெளி நாட்டு முதலீடுகளின் வருகையை அதிகரித் துள்ளமை, மஹிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் கிராமியரீதியிலான பொருளாதார முன்னெடுப்புக்களின் நகர்வு, உல்லாசப் பிரயாணிகளின் வருகை அதிகரித்துள்ளமை போன்ற பல காரணிகள் தற்போதைய துரித பொருளதார முன்னேற்றத்திறகான காரணங்கள் என்றால் மிகையாகாது. மெய்த் தலா உற்பத்தியானது அங்கத்துவ சார்க் நாடுகள் எல்லாவற்றையும் விட 1350 ஐக்கிய அமெரிக்க டொலர்களாக காணப் படுகின்றது. இது பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளில் 821, 807 ஐக்கிய அமெரிக்க டொலர்களாக காணப்படுகின்ற அதேவேளை ஏனைய நாடுகளில் இது 500 ஐக்கிய அமெரிக்க டொலர்களைவிடவும் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய அங்கமான மெய் உற்பத்திகளின் வளர்ச்சி யானது இலங்கையில் முன்னேற்றகரமான நிலையின் எடுத்துக்காட்டாகவே காணப் படுகின்றது.

2000-2005 ஆம் ஆண்டுகளுக்கிடையில் சராசரியாக ஆண்டொன்றிற்கு இலங்கை, பங்காளதேஷ் ஆகிய நாடுகளின் சனத் தொகை வளர்ச்சியானது 1.3 எனவும், ஏனைய சகல அங்கத்துவ நாடுகளில் இதன் பெறுமதி அதைவிட உயர்வாகவுமே காணப் படுகின்றன. ஆனால் 2012ஆம் ஆண்டில் சார்க் நாடுகள் யாவற்றையும்விட இலங்கை யில் இதன் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்து 0.9 ஆகக் காணப்படுகின்றது. எனவே சனத்தொகை வளரச்சி வேகத்திலும் எமது நாடு முற்போக்கான நிலைமையையே வெளிப்படுத்துகின்றது. இதற்கு கல்வி, சுகாதார வைத்திய சேவைகளினது முன்னேற்றமே பிரதான காரணமாகும்.

அட்டவணை - 1, 2 இற்கிணங்க சனத் தொகைக் கட்டமைப்பானது சார்க் அங்கத் துவ நாடுகளைவிட திருப்திகரமான நிலையை வெளிப்படுத்துகின்றது. 2005 ஆம் ஆண்டைய தரவுகளுக்கிணங்க 0-14 இடைப்பட்ட சனத் தொகையின் பங்கு 24 சதவீதமாகவும், பாகிஸ்தான், நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளில் 38 சதவீதமாகவும்,பங்காளதேஸ், மாலைதீவ, இந்தியா ஆகிய நாடுகளில் முறையே 35, 33, 32 சதவீதமாகவும் காணப்படுகின்றன. 14 வயதுக்கு கீழ் உள்ள சனத்தொகையின் பங்கு கூடிக்காணப்படு கின்றமை குறித்த நாட்டில் உற்பத்திச் செலவீனங்களைவிட கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய சமூக செலவீனங்களுக்கான செலவீனங்களயே அதிகரிக்கச்செய்யும். இதனால் சேமிப்பு, முதலீடு என்பன குறை வடைவதுடன் உற்பத்தி மீதான செலவு குறைவடைந்து பொருளாதார வளரச்சி பாதிப்படைவதற்கு காரணமாக அமையும்.

முடிவுரை

இலங்கை அன்னியராட்சிக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் சமூக முன்னேற்றங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மாறாக 1948ன் பின்னர் ஆட்சி செய்த அரசாங்கங்கள் யாவும் நாட்டினதும், மக்களினதும் நலன்கருதி பொருளாதார முன்னேற்றங்களுக்கு மாத்திரமன்றி சமூக முன்னேற்றங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆகையால், நவீன பொருளியல் அறிஞர் களின் வரைவிலக்கணங்களுக்கிணங்க பொருளாதார வளர்ச்சியுடன்கூடிய ஏனைய கல்வி, சுகாதாரம், மற்றும் வைத்திய சேவைகள், வேலைவாய்ப்பு, சமவருமான பங்கீடு, வறுமை ஒழிப்பு, தெரிவுச்சுதந்திரம் போன்ற போன்ற பல சமூக நல திட்டங் களுக்கும் கடந்தகால அரசாங்கங்கள் கவனத்தை செலுத்தியதன் விளைவாக இன்று இலங்கை ஏனைய சார்க் அங்கத்துவ நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் பொருளாதார முன்னேற்றங்களை விடவும் சமூக முன்னேற்றங்கள் மிகவும் திருப்தி கரமானதாக காணப்படுகின்றன. சமூக பொருளாதாரத் தாக்கங்களுக்கான அதாவது மாற்றங்களுக்கான காரணங்களாக புதிய

தொழில் நுட்பம், சட்டத்தில் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றம், பௌதீகரீதியான காலநிலை மாற்றங்கள் மற்றும் இயற்கை அல்லது உயிரியல்ரீதியலான மாற்றங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வகையில் இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்களே இத்தகைய முன்னேற்றங்களுக்கு மிக முக்கிய காரணங்களாகும். இதனால் 2015ம் ஆண்டுக்கிடையில் மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோள்களை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் சரியான பாதையில் இலங்கை சென்றுகொண்டிருக்கக்கூடிய நிலையை காணமுடிகின்றது. தற்போதைய இந் நிலையை தொடர்ச்சியாக பேணி பின்பற்றப்படும் பட்சத்தில் மாத்திரமே பொருளாதார அபிவிருத்தி அடைந்த நாடுகளை ஓரளவுக்காவது அண்மிக்க முடியும். ஆகையால் தற்போதைய அரசு மாத்திரமன்றி ஆட்சியை தொடரும் எந்தவொரு அரசாங்கமும் இவ்விடயத்தில் கவனத்தை ஈர்ப்பது அவசியமாகும்.

## References

Ana-Maria POPA (2012),"***The Impact of Social Factors on Economic Growth: Empirical Evidence for Romania and European Union Countries",*** Romanian Journal of Fiscal Policy , Volume 3, Issue 2, July-December 2012 (5), Pages 1-16

Central Bank of Sri Lanka (2008), ***Economic and Social Statistics of Sri Lanka***, Central Bank of Sri Lanka, Sri Lanka.

Central Bank of Sri Lanka (2007), ***Annual Central Bank Report***, 1990-2007, Central Bank of Sri Lanka, Sri Lanka.

Central Bank of Sri Lanka (1998), ***Economic Progress of Independent Sri Lanka***, Central Bank of Sri Lanka, Sri Lanka.

Francesco Burchi (2006), ***Identifying the Role of Education in Socio – Economic Development***, International Conference on Human and Economic Resources, Izmir, 2006, University of Roma Tre.

Jingan, M.L. (2007), ***The Economics of Development and Planning***, Virinda Publications (P) Ltd, 39th Edition.

United Nations Development Program (UNDP), (2008), ***Human Development Report***, (2007/08), New York, USA

United Nations Development Program (UNDP), (2014), ***Human Development Report***, (1990 - 2014), New York, USA

http://en.wikipedia.org/wiki/Socioeconomic_development.